DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 1

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ராஜகோபால் |
| Father's Name | : | R. குமார் |
| Village | : | கிருஷ்ணன்கோவில் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Caste | : | விஸ்வகர்மா |
| Calling | : | Business Developer |
| Religion | : | இந்து |
| Age | : | 29 |
| Date | : | 07.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.06.2024.

( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

07.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது கிருஷ்ணன்கோவில், கைலாஷ் கார்டன் முதல் தெருவில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்த மனோஜ் எனது உடன் பிறந்த தம்பி. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்து முடித்து விட்டு, நாகர்கோவில் ஆவின் பால் பண்ணை பக்கம் உள்ள ஸ்பேங்கிள்ஸ் இன்போடெக் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். எனது தம்பி ISRO வில் Training முடித்து விட்டு, வெளிநாட்டில் வேலைக்கு செல்வதற்காக இருந்தான். எனது தம்பி

மனோஜ௸யும், கிருஷ்ணன் கோவில் வடக்கு ரத வீதியில் உள்ள SSD பாத்திர கடையில் வேலை செய்த ஆஜர் எதிரி பேச்சி என்கிற இசக்கிமுத்து அவனுடன் வேலை பார்த்து கொண்டிருந்த அரவிந்த், சண்முக கிருஷ்ணன் ஆகியோர் நண்பர்கள். சிறு வயதிலே இருந்து நண்பர்களாக இருந்தார்கள். 2022 தீபாவளி அன்று எனது தம்பி ஆஜர் எதிரிக்கு குடித்து விட்டு மற்றவர்களிடம் பிரச்சினை பண்ணுகிறாய் குடிப்பதை நிறுத்திவிடு என அறிவுரை கூறினார். அதற்கு ஆஜர் எதிரி எனக்கு அட்வைஸ் பண்ண நீ யார் என கேட்டு தகராறு செய்து எனது தம்பியை அடித்துள்ளான். எனது தம்பிக்கு அதனால் வாயில் தையல் போட வேண்டியிருந்தது. நண்பர்கள் தானே என்றும், ஏதோ செய்து விட்டான் பிரச்சினை ஏதும் வேண்டாம் என்றும் நினைத்து கொண்டு புகார் எதுவும் கொடுக்கவில்லை. அந்த தீபாவளி சமயத்தில் இருந்து அடிக்கடி ஆஜர் எதிரி எனது தம்பியை பார்க்கும் போதெல்லாம் சாடை மாடையாக பேசி என்னைப் பற்றி மற்றவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார் கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் விடுத்துள்ளான். 25.08.2023 அன்று மாலை 5.30 மணியளவில் SSD பாத்திர கடையின் எதிரிரே உள்ள டீ கடையில் எனது தம்பி அவனுடைய நண்பர் அரவிந்த் மற்றும் சில நண்பர்களுடன் டீ குடித்துக் கொண்டிருந்தார். அப்போது பாத்திர கடையில் இருந்து ஆஜர் எதிரி பேச்சி வந்துள்ளார். வந்து உன்னை இந்த பக்கமே வரக் கூடாது என்று சொல்லியுள்ளேன் என்றும், ஏன் இங்கே வந்துள்ளாய் என்றும், கேட்டு பேச்சி எனது தம்பியை மிரட்டியுள்ளான். அப்போது தேவுடியா மவனே என கெட்ட வார்த்தையால் பேசியுள்ளான். அதை என் தம்பி என்னிடம் வந்து சொல்லி வறுத்தப் பட்டான். இரண்டு வாரத்தில் வெளி நாடு செல்வதற்கு என் தம்பி இருந்ததால் கேஸ் எதுவும் வேண்டாம் என விட்டுவிட்டோம். அதன் பிறகு 28.08.2023 திங்கள் கிழமை இரவு 8.15 மணியளவில் கிருஷ்ணன் கோவில் வடக்கு ரத வீதி, தெப்பகுளத்தின் தென் மேற்கின் வேலைக்கு போய் திரும்ப வந்து கொண்டிருந்த நானும், எனது தம்பியும் நின்று கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி இசக்கி பாத்திரக் கடையிலிருந்து புண்டாமவுனே,

தேவுடியாமவனே என சத்தம் போட்டுக் கொண்டு வந்தான். கையில் ஒரு கத்தியும் வைத்திருந்தான். இன்னையோட உன் கதை முடியனும் என சொல்லி கொண்டு என் தம்பியின் தலையில் குத்த முயற்சி செய்தான். என் தம்பி நகர்ந்து கொண்டான் இசக்கியை தள்ளியும் விட்டான். அதில் பக்கத்தில் இருந்த சுவரில் மோதி கத்தி கீழே விழுந்து விட்டது. அந்த சத்தம் கேட்டு பாத்திரக் கடையில் வேலை பார்த்து கொண்டிருந்த சண்முக கிருஷ்ண என்ற கிஷோரும், அரவிந்த் ம் வந்தார்கள். நாங்களும் சத்தம் போட்டோம். எனது தம்பி வீணாக பிரச்சினை பண்ணாதே போய்விடு என இசக்கியை பார்த்து சொன்னான். அப்போது இசக்கி இடுப்பில் ஒழித்து வைத்திருந்த ஸ்கூரு டிரைவரை எடுத்து இன்னையோட உன் பிரச்சினை எல்லாம் முடியனும் என சொல்லிக் கொண்டு அந்த ஸ்கூரு டிரைவரை வைத்து எனது தம்பியை சரமாரியாக குத்தினான். எனது தம்பியின் நெஞ்சில், வயிற்றுக்கு மேலே, அடிவயிற்றில், முதுகில், வலது காதில் அதை ஒட்டி மண்டைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. அப்போது கீழே விழுந்து கிடந்த கத்தியை எடுத்து என்னை விட்டுவிடு வலிக்கிறது என விசிறினான். அதில் எதிரிக்கு இடது காலிலும், கையிலும் லேசாக கீறல் ஏற்பட்டது. நாங்கள் சண்முக கிருஷ்ண, அரவிந்த் ஆகியோர் இசக்கியை தடுத்தோம். என்னை தள்ளி விட்டு விட்டு இதோடு உன் கதை முடிய வேண்டும் என சொல்லிக் கொண்டு, மீண்டும் இசக்கி எனது தம்பியின் கழுத்தில் ஸ்கூரு டிரைவரை வைத்து குத்தினான். அதில் வலது கழுத்துப் பகுதியிலும், சங்கு பகுதியிலும் குத்தினான். வலது விளா பகுதியிலும் குத்தினான். எனது தம்பி நிலை தடுமாறி விழுந்து விட்டான். அப்போது அவனுக்கு காலிலும் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி அங்கிருந்து தப்பித்து கொள்வதற்கு ஸ்கூரு டிரைவரையும், Honda Dio வண்டியையும் எடுத்துக் கொண்டு மேற்கு திசையில் ஓடி விட்டான். அந்த வண்டியின் எண். TN 74 AZ 9735. தம்பியை ஆஸ்பத்திரிக்கு எடுத்து செல்வதற்கு ஆட்டோ தேடினேன் ஒரு ஆட்டோவும் கிடைக்க வில்லை. அப்போது எனது தம்பிக்கு தெரிந்த அஜய் என்பவன் அந்த பக்கம் Suzuki பைக்கில் வந்தான். அவனுடைய வண்டியில்

வைத்து தம்பியை வெட்டூர்ணிமடத்தில் உள்ள சத்தியம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம். ICU வில் வைத்து மருத்துவம் செய்தார்கள். ஒரு 8.45 மணிக்கு கொண்டு சென்றோம் 5 நிமிடத்தில் தம்பி தவறிவிட்டான் என சொன்னார்கள். மருத்துவமனையில் போலீசிடம் தகவல் சொல்ல சொன்னார்கள். நான் இரவு 9.45, 10.00 மணியளவில் வடசேரி காவல் நிலையத்திற்கு சென்று புகார் எழுதி கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் எழுதி கொடுத்த புகார் தான். அது அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னால் அந்த ஸ்கூரு டிரைவரை மற்றும் கத்தியை அடையாளம் காட்ட முடியும். அப்போது தெரு விளக்கு வெளிச்சத்தில் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் ஸ்கூரு டிரைவர் மற்றும் கத்தியால் தான் அன்றைய தினம் ஆஜர் எதிரி எனது தம்பியை தாக்கினான். அந்த ஸ்கூரு டிரைவர் சா.பொ. 1 ஆகவும், கத்தி சா.பொ. 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரி ஓடிச் சென்ற பைக்கை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அந்த பைக் சா.பொ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தம்பி அப்போது நீலம் மற்றும் கருப்பில் கட்டம் போட்ட சட்டை போட்டிருந்தான். கருப்பு ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருந்தான். என்னிடம் காட்டப்படும் சட்டை மற்றும் பேண்ட் அந்த சட்டை மற்றும் பேண்ட் தான். அவை சா.பொ. 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அப்போது என் தம்பி அணிந்திருந்த நீலக் கலர் செருப்பு அணிந்திருந்தான். என்னிடம் காட்டப்படும் அந்த செருப்புதான். செருப்பு ஜோடி சா.பொ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அங்கே நாங்கள் கிளம்பும்போது இன்னொரு ஜோடி சிதறி கிடந்தது. அது என்னிடம் காட்டப்படும் செருப்புதான். அவை சா.பொ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை இரண்டு முறை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்) :-</u>

நான் வேலை பார்த்த இடத்தில் எனக்கு வேலை நேரம் என்ன என்றால் நான் Business Developer ஆக வேலை பார்த்தேன். குறிப்பிட்ட நேரம் கிடையாது. Client

கூப்பிடும் நேரத்தில் போக வேண்டியிருக்கும். புகார் மனுவில் நான் சம்பவ இடத்திற்கு வேலை பார்த்த இடத்திலிருந்து எந்த வாகனத்தில் வந்தேன் என்றோ, எப்படி வந்தேன் என்றோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வீடு பக்கத்தில் தான் உள்ளது நடந்து தான் வந்தேன். எனது தம்பி சம்பவ நடந்த இடத்திற்கு எப்படி வந்தார் என்று புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீஸ் விசாரிக்கும்போதோ, புகார் மனுவிலோ எதிரியும், எனது தம்பியும் சிறு வயதில் இருந்து நண்பர்கள் என சொல்லவில்லை என்றால் சரிதான், குறிப்பிட்டு சொல்லவில்லை. எனது தம்பிக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. நான் மது அருந்துவேனா என்றால் அருந்தமாட்டேன். அன்றை தினம் பிரதோஷம் தம்பி கோவிலுக்கு போய்விட்டு வந்தான். இந்த விவரத்தை புகார் மனுவிலும், போலீசார் விசாரிக்கும்போதும் கூறவில்லை என்றால் புகார் மனுவில் கூறவில்லை, போலீசார் விசாரிக்கும்போது சொன்னேன். இசக்கி மது அருந்துவதை பார்த்து உள்ளேனா என்றால் நிறைய தடவை பார்த்துள்ளேன். அந்த விவரம் புகாரிலோ, போலீசார் விசாரிக்கும்போதோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு மது அருந்தும் பழக்கம் கிடையாது என்றாலும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பலமுறை பார்த்துள்ளேன். தீபாவளி அன்று நடந்ததாக சொல்லும் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 25.08.2023 அன்று நடந்ததாக சொல்லும் சம்பவம் குறித்தும், நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தம்பிக்கு வாயில் தையல் போட்டதாக புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றாலும் புகாரில் சொல்லவில்லை. ஆனால் போலீசார் விசாரிக்கும்போது சொன்னேன். பால்பண்ணையிலிருந்து எனது வீட்டிற்கு வர வேண்டும் என்றால் தெப்பகுளம் வழியாக வர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தெப்பகுளம் வழியாகவும் வரலாம் அன்றைய தினம் கிருஷ்ணன் கோவில் கீழ் பகுதியில் இருந்து, பிரச்சினை நடந்த பகுதி வழியாக வந்து எனது வீட்டிற்கு போய்விட்டு, வண்டியை வைத்துவிட்டு மீண்டும் அந்த இடத்திற்கு

வந்தேன். இந்த விவரத்தை புகார் மனுவிலோ, போலீசார் விசாரிக்கும்போதோ கூறவில்லை என்றால் புகார் மனுவில் கூறவில்லை. ஆனால் போலீசார் விசாரிக்கும் போது கூறினேன். எனது வீடு வடசேரி காவல் நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதா என்றால் இல்லை. சுமார் 350 மீட்டர் உள்ளது. எதிரியின் வீடு எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 250 அல்லது 300 மீட்டர் தான் இருக்கும். தெப்பகுளத்திற்கும், காவல் நிலையத்திற்கும் 50 அல்லது 100 மீட்டர் இருக்கும். தற்போது சாட்சி எதிரியின் வீடு 200 மீட்டர் தொலைவில் உள்ளது என்று கூறுகிறார். புகார் மனுவிலோ, போலீசார் விசாரிக்கும்போதோ எதற்காக சம்பவ இடத்திற்கு போனேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அவசிய படவில்லை அதனால் சொல்லவில்லை. நானும், எனது தம்பியும் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். என்ன பேச வேண்டும் என்றாலும், எனது தம்பியுடன் வீட்டிலேயே பேசலாம் என்றால் சரிதான். நானும், எனது தம்பியும் சம்பவ இடத்தில் வைத்து பேசிக் கொண்டிருந்த தகவல் வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கும், வீட்டில் உள்ளவர்களுக்கும் தெரியும். வடசேரி கிருஷ்ணன்கோவில் சுற்று வட்டாரத்தில் 1000 க்கு மேல் வீடுகள் இருக்கும் என்றால் நிறைய வீடுகள் உள்ளது. எண்ணிக்கை எனக்கு தெரியாது. சம்பவம் இடத்திலிருந்து காவல் நிலையம் சத்தமாக பேசினாலோ, சண்டைப் போட்டாலோ கேட்கும் தொலைவில் தான் உள்ளது என்றால் சரியல்ல கேட்காது. சத்தியம் மருத்துவமனைக்கு விரைவில் செல்வதற்கு காவல் நிலையம் வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. எனது வீட்டின் வழியாக சென்று ரயில்வே ரோடு வழியாக செல்வதுதான் விரைவாக செல்ல முடியும். நான் அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணன்கோவில் அருகிலும், சம்பவ இடம் மற்றும் காவல் நிலையம் அருகில் ஆட்டோ, டெம்போ மற்றும் டேக்சி ஆகியவை 24 மணி நேரமும் இருக்கும் என்றால் சரியல்ல. நான் தேடிபார்த்தேன் எதுவும் இல்லை. அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவ

நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 50 மீட்டர் தொலைவில் J.K. மருத்துவமனை உள்ளது என்றால் சரியல்ல. 250 மீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவ நடந்ததாக சொல்லும் பக்கத்தில் திலிப் மருத்துவமனை, வில்லியம் மருத்துவமனை, கெவின் மருத்துவமனை உள்ளது என்றால் கெவின் மருத்துவமனை உள்ளதா என்று தெரியவில்லை. திலிப் மருத்துவமனை உள்ளதா என்று தெரியவில்லை. வில்லியம் மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனை அனைத்தும் மல்டி ஸ்பெஸ்லிட்டி மருத்துவமனைகள் என்றால் J.K. மருத்துவமனை மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. சத்தியம் மருத்துவமனை மேற்சொன்ன மருத்துவமனையிலிருந்து தூரமாக உள்ளது என்றால் நான் சென்ற வழியில் சத்தியம் மருத்துவமனைதான் முதலில் இருந்தது. சத்தியம் மருத்துவமனை மிக தொலைவில் உள்ளது என்றாலும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்று புகாரிலோ, போலீசார் விசாரிக்கும்போதோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. பைக்கில் சென்றதாக சொல்லியுள்ளோம். அந்த பைக்கின் எண் என்ன என்றோ, என்ன பைக் என்றோ அதன் உரிமையாளர் யார் என்றோ புகாரிலோ, போலீசார் விசாரிக்கும்போதோ சொல்லவில்லை என்றால் போலீசார் விசாரிக்கும்போது Suzuki பைக் என சொல்லியுள்ளேன். புகாரில் எதுவும் சொல்லவில்லை. புகாரிலோ, போலீசார் விசாரிக்கும்போதோ எனது தம்பியை மருத்துவமனைக்கு என்னுடன் கூட்டிச் சென்ற நபரின் பெயரை சொல்லவில்லை என்றால் புகாரில் சொல்லவில்லை. போலீசார் விசாரிக்கும்போது சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எந்த வாகனத்தில் கூட்டி சென்றோம் என்றோ யார் என்னுடன் கூட்டி சென்றதோ என்று புகாரிலோ, போலீசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தம்பியின் நண்பர் அஜய் யுடன் கூட்டிச் சென்றதாக தற்போது தான் முதன் முதலாக சொல்கிறேன் என்றாலும் புகாரிலோ போலீசார் விசாரிக்கும்போதோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

சொல்லியுள்ளேன். அன்றைய தினம் எனது தம்பி யை பைக்கில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது எனது உடையில் ரத்தக் கறை பட்டதா என்றால் லேசாக பட்டிருந்தது. வெளியே அதிகமாக இரத்தம் வரவில்லை. சம்பவ நடந்ததாக சொல்லும் இடத்திலும் ரத்தம் இல்லை என்றால் ரத்தம் இருந்திருக்கும். நான் அணிந்திருந்த உடைகளை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. உண்மையிலேயே சம்பவம் நான் சொல்வது போல நடந்து நான் எனது தம்பியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருந்தால் எனது உடையில் ரத்தம் படிந்திருக்கும் என்றாலும் அதை போலீசார் கைப்பற்றியிருப்பார்கள் என்றாலும் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றாலும் எனது உடையை போலீசார் கைப்பற்றியிருப்பார்கள் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல சம்பவம் நடந்திருந்தால் அந்த இடத்தில் ரத்தம் நிறைய வடிந்திருக்கும் என்றால் ஸ்கூரு டிரைவரை வைத்துக் குத்தியதால் ரத்தம் அதிகமாக வரவில்லை. எதிரிக்கும், எனது தம்பிக்கும் முன் விரேதமாக காண்பிப்பதற்கு எந்த ஒரு ஆவணமும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை. புகார் மனுவிலோ, போலீசார் விசாரிக்கும்போதோ எதிரியின் நண்பர் கிஷோர் எப்போது வந்தார் என்றோ, எந்த திசையில் இருந்து வந்தார் என்றோ  குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எப்போது வந்தார் என சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் அவ்வாறு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு தற்போது சாட்சி எப்போது வந்தார் என குறிப்பிடவில்லை என்று கூறுகிறார். சாட்சி அரவிந்த் சம்பவ இடம் வந்ததாகவோ, சத்தம் போட்டதாகவோ, சம்பவத்தை பார்த்தாகவோ, புகார் மனுவில் இல்லை என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரி வாகனத்தில் சம்பவ இடத்திற்கு வந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தம்பிக்கு மொத்தம் எத்தனை காயம் ஏற்பட்டது என குறிப்பிட்டு எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஸ்கூரு டிரைவரால் எதிரி குத்தியதால் ஏற்பட்டது. எதிரிக்கும் எனது

தம்பிக்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றாலும், சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லபடும் தேதியில் நான் சொல்வது போல எதிரிக்கு என் தம்பியால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் அடையாளம் காட்டிய ஸ்கூரு டிரைவர் மற்றும் கத்திக்கும், எதிரிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரி அன்றைய தினம் வாகனத்தில் வந்ததை நான் பார்க்கவில்லை என்றால் அவன் கடை இருந்தத திசையில் இருந்து நடந்துதான் வந்தான். போகும்போதுதான் வாகனத்தில் போனான். அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் அந்த வாகனத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்லியவாறு சொன்ன விதத்தில் எனது தம்பியை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது குடும்பத்தினர் யாரும் சாட்சியாக இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் எனது மாமாவை சாட்சியாக சேர்த்துள்ளார்கள். எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றாலும் வழக்கு எதிரி மீது ஜோடிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எந்த சம்பவத்தையும் நேரடியாக பார்க்காமல் எதிரி மீது பின் சிந்தனையின் பேரில் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் எங்கு வைத்து எத்தனை மணிக்கு எழுதினேன் என போலீசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் 10 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன் என சொன்னேன். அ.சா 1 புகார் பொய்யாக புனையப்பட்ட புகார் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.